# வானவில் விற்பனைக்கூடம்:
# வாடிக்கையாளர் குறித்த ஆய்வு

## ஆய்வறிக்கை

30 ஜனவரி 2008


**மக்கள் ஆய்வு**

லொயோலா கல்லூரி

சென்னை 600 034

# அணுகுமுறை

## பின்னணி:



*01.* வானவில் விற்பனைக் கூடம் டிசம்பர் 2007-இல் ஏற்பாடு செய்திருந்த “இனிய இல்லம்” என்ற மையப்பொருளைக் கொண்ட சிறப்பு விற்பனை குறித்த வாடிக்கையாளர் அனுபவங்களையும் பரிந்துரைகளையும் பதிவு செய்து ஆய்வுப்பூர்வமாய்த் தொகுக்க “மக்கள் ஆய்வு” பணிக்கப்பட்டது. அதன்படி, டிசம்பர் 22-ஆம் நாள் (சனிக்கிழமை) தொடங்கி ஒரு வாரத்திற்கு வாடிக்கையாளரிடம் கருத்துச் சேகரிக்கப்பட்டது. முன்-ஆய்வு அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட வினாத் தொகுப்பு இதற்கெனப் பயன்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர்கள் கடையிலிருந்து வெளியே வரும்போது, கடையின் வாயிலிலேயே, மொத்தம் 251 பேரை ஆய்வுக் குழு சந்தித்தது. இவர்களில் ஆண்கள் - 55.4, பெண்கள் - 44.6. மிகப் பெரும்பான்மையோர் (92.0) திருமணமானவர்கள்.

## முதல் வருகை:

*02.* வானவில்லுக்கு வருகை தந்தோரில் கணிசமான அளவினர் (37.8) முதல் முறையாக வந்துள்ளனர்.

| வருகை விவரம் | விழுக்காடு |
|---|---|
| தொடர்ந்து வானவில்லில் வாங்குவோர் | *19.5* |
| பெரும்பாலும் இங்கே வாங்குவோர் | *15.9* |
| குறிப்பிட்ட சில வகைகள் மட்டும் வாங்குவோர் | *25.9* |
| முதல்முறை வருகை தந்துள்ளோர் | *37.8* |

முதல்முறை வருகை தந்துள்ளோருக்கும் ஏற்கெனவே இங்கு வந்துள்ளோருக்கும் இடையே உள்ள ஒற்றுமை-வேற்றுமைகளைப் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் ஒப்பீட்டு ஆய்வுக்கு உட்படுத்துவது எதிர்காலத் திட்டமிடலுக்குப் பேருதவியாக அமையும் என்பதால், அத்தகைய ஒப்பீட்டு ஆய்வு முடிவுகள் கீழே முன்வைக்கப்படுகின்றன.